# மாவனெல்ல பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 மே 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மாவனெல்ல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவனெல்ல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 06 காணிகளினதும் கட்டிடயங்களினதும் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

--------------------------

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பஹல கடுகனடனாவவில் 63 நீர்ப் பயன்பாட்டு நிலையங்களில் இருந்து ரூபா 208,783 தொகை அறவிட வேண்டியிருந்தது. இந்தப் பயன்பாட்டு நிலையங்களின் நீர் வழங்கல் பல வருட காலத்திற்கு முன்பிருந்து துண்டிக்கப்பட்டிருந்ததுடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயலாற்றல் / செயற்திறனின்மைகள்

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நிலவி வரும் ரூபா 1,584,789 தொகையான பழைய கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது மருந்துப் பொருட்களுக்காக ரூபா 400,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மூன்று சந்தர்ப்பங்களின் போது மாகாண சபைகளிலிருந்தும் வேறு வெளி நிறுவகங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்ற மருந்துகள் தவிர்ந்த 2012 செப்தெம்பர் 19 கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் தேவையான மருந்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. ஆயுர்வேத மருந்தகத்தில் மருந்துகளின் இருப்பு நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளப்படுவதற்கு வருகை தந்த நோயாளிகளுக்காக சந்தையில் கொள்வனவு செய்யப்படுவதற்காக சிட்டைகள் வழங்கப்படுவது கண்டறியப்பட்டது.

## 03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்